# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1656/2 - 2010 මැයි 31 වැනි සඳුදා - 2010.05.31

*1656/2 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் 915

**மருந்துப்பொருள் தயாரிப்புகளின் உற்பத்திக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதுடன் பிற வழக்குத் தொடருதல் நடவடிக்கைகளுக்காகவும் ஸ்பிரித்து (ஈதைல் மதுசாரம்) மீதான தீர்வை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் சனாதிபதியினால் இந்தக் கட்டளை ஆக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2010, மே 26.

### கட்டளை

1. இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீதான தீர்வை, அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்தில் 2010, யூன் 01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்படுதல் வேண்டும்.

2. ஏதேனும் பிற அறிவித்தல்களுக்கு எதுவும் முரண்படாத வகையில் அத்தகைய ஸ்பிரித்து (ஈதைல் மதுசாரம்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து விடுவிக்கப்படும் பொழுது இத் தீர்வைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007, திசெம்பர் 3 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 901 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், 2010, பெப்புருவரி 17 ஆம் திகதிய 1641/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட913 ஆம் இலக்க மது வரிஅறிவித்தல் மற்றும் 2010, மே 6 ஆம் திகதிய 1652/40 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 914 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் என்பன இத்தால் நீக்கப்படுகின்றது.

**அட்டவணை**

| | நிரல் I<br>பொருட்கள் | நிரல் II<br>தீர்வை விகிதம் |
|---|---|---|
| 1. | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வைத்திய சாலைகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களினால் அல்லது வேறுவகையில் மதுவரி செலுத்தப்பட வேண்டிய உரிமம் வழங்கப்பட்ட குடிபான மதுசாரம் தயாரிப்பாளர்களினால் பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (ஈதைல் மதுசாரம்) | இல்லை |
| 2. | ஸ்பிரத்து உள்ளடங்கிய மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் மற்றும் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் பயன்படுத்தப்படுகின்ற (ஈதைல் மதுசாரம்) ஸ்பிரித்து வகைகள் மற்றும் வேறு விடயங்களுக்காக பயன்படுத்தப் படுகின்றன (ஈதைல் மதுசாரம்) ஸ்பிரித்து வகைகளுக் காகவும் மாதமொன்றுக்கு ஆகக்கூடிய 20,000 லீற்றர்கள் வரை. (மீள் வடிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரித்துகளைப் பொறுத்தவரையிலும் இந்நிபந்தனை ஏற்புடையதாதல் வேண்டும்). ஆயினும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குள் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக ஸ்பிரித்து இறக்குமதி செய்யப்படுமாயின், இந்த ஏற்புடையதாக மாட்டாது. | தொகை லீற்றர் ஒன்று நூற்று இருபத்தைந்து ரூபா<br>( 125 ரூபா) |
| 3. | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் (மேற்படி விடயம் 2 இல் குறிப்பிடப்பட்ட) பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (ஈதைல் மதுசாரம்) மாதாந்த வரையறை 20,000 லீற்றர்களுக்கு அதிகமானபோது. | தொகை லீற்றர் ஒன்று ஐநூறு ரூபா<br>(500 ரூபா) |
| 4. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் மதுசார ஸ்பிரித்து வகைகள் (தொழில்நுட்ப ஸ்பிரித்து/பலம்குறைந்த ஸ்பிரித்து). | தொகை லீற்றர் ஒன்று நூறு ரூபா<br>(100 ரூபா) |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.